சுருக்கம்

பணியமைப்பு— நகராட்சிப் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியைச் சார்ந்த செயற் பொறியாளர்களை அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் கண்காணிப்புப் பொறியாளர்களாக நியமித்தல்— ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (பா.ந.4) துறை

அரசு ஆணை (2D) எண். 154 நாள் : 16 –12–2008

திருவள்ளுவராண்டு 2039, மார்கழித் திங்கள் 1 –ம் நாள்

படிக்க:

1. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண்.ந.க.எண்.4468/ எப்4/ 2008–5 நாள் 15.10.2008

2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண்.ந.க.எண்.4488/ எப்4/ 2008 நாள் 10.12.2008

ஆணை:-

பார்வையில் படிக்கப்பட்ட கடிதங்களில் பெறப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பில் தற்போது கீழ்கண்ட பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன எனத் தெரிவித்துள்ளார்:-

| பணியிடம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் | நிரப்ப வேண்டிய பணியிடம் | மாநகராட்சியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டப் பணி (JNNURM) | கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் | மதுரை | 1 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டப் பணி(JNNURM) | கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் | கோயம்புத்தூர் | 1 |
| தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்–III (TNUDPIII) (JNNURM) | கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் | நகராட்சி நிர்வாக இயக்குநரகம் | 1 |

மேலும், அவர் 1996 ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகளில் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு வழி வகை செய்யப்படவில்லை. தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்கள் தற்காலிகமானவை. திட்டம் சார்ந்தவை (temporary and project-specific posts). என்றும்,

கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களை நிரப்ப தகுந்த கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் உள்ள பொறியாளர்களை அயற்பணியில் அனுப்ப அரசின் பிற துறைகள் ஆர்வம் காட்டவில்லை என்றும்,

1996 ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகளில் "கண்காணிப்புப் பொறியாளர்" பதவிக்கு வழி வகை செய்யப்படவில்லை. 1997ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகளில் "கண்காணிப்புப் பொறியாளர்" பதவிக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது என்றும்,

1997ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகளின்படி கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் தகுதிவாய்ந்த செயற் பொறியாளருக்கு பதவி உயர்வு அளித்து நிரப்ப வேண்டும். அவ்வாறு பதவி உயர்வு பெற ஊட்டுப் பதவியில் (feeder category) மூன்று வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்றும்,

தற்போது 1997ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணி விதிகளின் ஒரே ஒரு கண்காணிப்புப் பொறியாளர் பதவி தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்–3க்காக (TNUDP-III) ஒதுக்கப்பட்டுள்ளது என்றும்,

மேற்கண்ட சூழ்நிலையில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் காலியாக உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களையும், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்–III திட்டத்திற்கென தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தையும், நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியைச் சார்ந்த தகுதிவாய்ந்த செயற்பொறியாளர்களைக் கொண்டு நிரப்புவது தவிர வேறு வழியில்லை என்றும்,

ஏற்கெனவே தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியைச் சார்ந்த நகரப் பொறியாளர் திரு ஆர். ரகுநாதன் அவர்களுக்கு, நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியில் உயர் பதவியான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வளித்து அயற்பணியில் அரசு பணியமர்த்தியது. மேலும் தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணி விதிகளின் கீழ் கண்காணிப்புப் பொறியாளர் பதவி இல்லாத நிலையில், திருநெல்வேலி மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பதவி கண்காணிப்புப் பணியாளர் பதவியாக நிலை உயர்த்தப்பட்டது என்றும்,

அதன் பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் தலைமைப் பொறியாளர் பதவியாக நிலை உயர்த்தப்பட்டது. அவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட தலைமைப் பொறியாளர் பதவி, நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியில் இல்லாததால், மேற்படி தனியர் அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில், நிலை உயர்த்தப்பட்ட தலைமைப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும்,

தமிழ்நாடு நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியைச் சார்ந்த கீழ்கண்ட நான்கு செயற்பொறியாளர்கள் பணி மூப்பு பட்டியலின்படி கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு தகுதி பெற்றவர்கள்:-

| வ. எண் | நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியைச் சார்ந்த செயற் பொறியாளரின் பெயர் | தற்போது பணியாற்றும் இடம் |
|---|---|---|
| 1 | திரு எம்.ஞானமணி | மண்டல செயற் பொறியாளர், செங்கல்பட்டு |
| 2 | திரு ஆர்.விஜயகுமார் | செயற் பொறியாளர், சேலம் (அயற்பணியில்) |
| 3 | திரு கே.பூபதி | செயற் பொறியாளர், JnNURM கோயம்புத்தூர் மாநகராட்சி (அயற்பணியில்) |

கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு ஊட்டுப் பதவியான (feeder post) செயற்பொறியாளர் பதவியில் மூன்று வருடம் பணியாற்றியவர்கள். இவர்களுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கையோ, லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணையோ இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மேலே தெரிவிக்கப்பட்ட ஒப்புமையின் அடிப்படையில் நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு பெறத் தகுதிவாய்ந்த செயற் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்து மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் காலியாக உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களையும், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்-3ல் காலியாக உள்ள கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தினையும் அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்டவாறு நிரப்பலாம்:-

(1) சேலம் மாநகராட்சி, செயற் பொறியாளர் (அயற்பணி), திரு ஆர்.விஜயகுமார் அவர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு அளித்து ஒப்பந்த அடிப்படையில் அயற்பணியில் மதுரை மாநகராட்சியில் JnNURM கண்காணிப்புப் பொறியாளராக நியமிக்கலாம் எனவும்,

(2) கோயம்புத்தூர் மாநகராட்சியில் JnNURM செயற்பொறியாளராக அயற்பணியில் உள்ள திரு ஆர்.பூபதி அவர்களுக்கு, 1996ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணிவிதி 4-ன்படி பணிஓய்வு பெற இரண்டாண்டுகளுக்கு மேல் உள்ளதால், தற்காலிக பதவி உயர்வு அளித்து ஒப்பந்த அடிப்படையில் அயற்பணியில் கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் JnNURM கண்காணிப்புப் பொறியாளராக நியமிக்கலாம் எனவும்,

(3) செங்கற்பட்டு மண்டல செயற்பொறியாளராக பணியாற்றும் திரு எம்.ஞானமணி அவர்களை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் *TNUDP-III* ல் கண்காணிப்புப் பொறியாளராகவும், நியமிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை இத்துறை கவனமுடன் பரிசீலித்ததில் கீழ்கண்ட இக்கட்டான சூழ்நிலை நிலவுவது தெரிய வருகிறது:-

- மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் *JnNURM* திட்டம், *TNUDP-III* ஆகிய திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசர முக்கியத்துவம் திட்டங்கள் ஆகும்.

- JnNURM திட்டத்திற்கெனவும் TNUDP-III திட்டத்திற்காகவும் பிரத்தியேகமாக ஏற்கெனவே நிதித்துறையின் ஒப்புதலுடன் கண்காணிப்புப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

- தற்போது முழுநேர உயர் மட்ட மேற்பார்வையின்றி JnNURM திட்டம் இரண்டு மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவசர முக்கியத்துவம் வாய்ந்த இப்பணியிடங்களை உடனடியாக நிரப்பப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது.

- JnNURM திட்டத்திற்கு தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்ப மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணிவிதிகளில் இடமில்லை. அயற்பணியில் மட்டுமே நிரப்ப இயலும்.

- மேற்படி பணியிடங்களை அரசின் பிறதுறைகளைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர்களைக் கொண்டு அயற்பணியில் நிரப்ப நகராட்சி நிர்வாக ஆணையரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. அரசின் பிறதுறைகள் தங்களது பொறியாளர்களை அயற்பணியில் அனுப்ப ஆர்வம் காட்ட வில்லை.

- மேற்படிபணியிடங்கள் நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியைச் சார்ந்த தகுதிவாய்ந்த பொறியாளர்களைக் கொண்டு நிரப்புவது மட்டுமே ஒரே வழி என கருதப்படுகிறது.

- ஆனால் நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பணியைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்குத் தகுதிவாய்ந்த செயற்பொறியாளர்கள் கொண்ட ஏற்பளிக்கப்பட்ட பணிமூப்புப்பட்டியல் தற்போது இல்லை. பணிமூப்புப் பட்டியல் மட்டுமே உள்ளது.

- நகராட்சி நிர்வாக ஆணையர் காட்டியுள்ள முன்உதாரணத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் தலைமைப் பொறியாளர் பதவியாக நிலை உயர்த்தப்பட்டது. அவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட தலைமைப் பொறியாளர் பதவி நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியில் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்புப் பொறியாளர் அயற்பணியில் ஒப்பந்த அடிப்படையில் நிலை உயர்த்தப்பட்ட தலைமைப் பொறியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், கண்காணிப்புப் பொறியாளர் பணியிடங்களை நிரப்புவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அனுப்பியுள்ள பரிந்துரைகளை ஏற்று, JnNURM/TNUDP-III திட்டங்களுக்கென பிரத்தியேகமாக ஏற்கெனவே நிதித்துறையின் ஒப்புதலுடன் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்புப் பணியாளர் பணியிடங்களை கீழ்கண்ட பொறியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மாற்றுப் பணியில் (deputation on contract basis) நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியைச் சார்ந்த செயற் பொறியாளரின் பெயர் | தற்போது பணியாற்றும் இடம் | கண்காணிப்புப் பொறியாளராக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மாநகராட்சி/திட்டம் |
|---|---|---|---|
| 1 | திரு எம்.ஞானமணி | மண்டல செயற் பொறியாளர், செங்கல்பட்டு | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்டம்-3 (TNUDP-III) |

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு ஆர்.விஜயகுமார் | செயற் பொறியாளர், சேலம் (அயற்பணியில்) | மதுரை |
| 3 | திரு கே.பூபதி | செயற் பொறியாளர், JNNURM கோயம்புத்தூர் மாநகராட்சி (அயற்பணியில்) | கோயம்புத்தூர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்
திரு எம்.ஞானமணி, மண்டல செயற் பொறியாளர்,செங்கல்பட்டு
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)
திரு ஆர்.விஜயகுமார் செயற் பொறியாளர், சேலம் (அயற்பணியில்)
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)
திரு கே.பூபதி செயற் பொறியாளர், JnNURM கோயம்புத்தூர் மாநகராட்சி (அயற்பணியில்)
(நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–600 108
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ட.III) துறை, சென்னை–9.
நிதித் துறை, சென்னை–600009
அரசு செயலாளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நி–2) துறை, சென்னை–9

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்